RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s201

OPEN ACCESS

# தமிழ் நவீனக் கவிதைகளில் பின் நவீனச் சூழலும் குடும்ப உறவுகளும்

செ. மார்ட்டின் ராஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி - ஏ) (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Postmodern Context and Family Relations in Tamil Modern Poetry

**S. Martin Raja** [a, *]

[a] Department of Tamil, Bishop Heber College (Autonomous-A), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: smartinraja@yahoo.com

Received: 01-06-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

The Sangam literature poems prove that the ancient Tamils gave priority to family relations. The development of science and technology, the proliferation of machines, and new ideas that emerged in modern times have brought about changes in family relations. Social media such as mobile phones, Facebook, YouTube, the web, movies, etc., have alienated man from family relationships. They have expanded personal communication to the world. In this situation, in families, individual selfishness, acting in accordance with the circumstances, and fake love are identified as postmodern relations. There are compulsions and confusions due to the lack of consensus between family relationships. This article is explained as examining the postmodern context and family relations in modern Tamil poetry on the conditions of the mother-in-law-daughter-in-law relationship, the relationship between the mother and the child, the loneliness and mourning of the mother who is separated from the son, the actions of the father and the reaction of the child.

**Keywords:** Relationship, Postmodern Context, Modern Tamil Poetry

## முன்னுரை

தமிழ்ச் சமூகத்தில் மரபார்ந்தக் குடும்ப உறவுகளில் ஏற்பட்ட நவீன மாற்றங்களிலிருந்தும் பின் நவீனச் சூழலிலிருந்தும் குடும்ப உறவுகளை அடையாளம் காண வேண்டியுள்ளது. அந்தவகையில் பெருகி வருகின்ற நுகர்வுக் கலாச்சாரங்கள், சந்தைமயப் பொருட்குவியல்கள் முதலியன தனிமனித சிந்தனைகளில் தொடங்கி வாழ்க்கைமுறைகளிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஒவ்வொரு தனிமனிதனும் குடும்ப உறவுகளுக்கிடையில் கருத்துமுரண்களுடன் சமரசம் செய்து கொண்டும் உழன்று கொண்டும் வாழ்ந்து வருகின்றான். தனிமனிதர்களிடையே சுயநலப்பண்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கணவன் - மனைவியையும், மனைவி - கணவனையும், பெற்றோர் - பிள்ளையையும் கட்டுப்படுத்தவோ, அதிகாரம் செலுத்தவோ இயலாத போக்குகளும் குடும்ப உறவுகளுக்கிடையில் காணப்படுகின்றன. இதனடிப்படையில், தமிழ் நவீனக் கவிதைகளில் பின் நவீனச் சூழலையும் குடும்ப உறவுகளின் நிலைமையையும் வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## சங்க காலத்தில் குடும்ப உறவுமுறைகள்

தமிழர்களின் குடும்ப உறவுமுறைகளைக் குறித்து சங்கப் பாடல்வரிகள் பின்வருமாறு சான்றளிக்கின்றன.

"நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை"

"மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்

பிசைந்து தினவாடிய முலைகள் பெரிது அழிந்து"

"ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்

மூத்தோன் வருகை என்னாது"

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்

பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே"

என்னுமிடத்து, பாட்டன், தாத்தா, தந்தை, மகன், முதிர்தாய், மூத்தமகன், இளையமகன் முதலிய உறவுகளும் கணவன், மனைவி, குழந்தைகள், மாமனார் ஆகிய உறவுமுறைகளும் இருந்துள்ளன. சங்க காலத்தில் மக்கள் கூட்டுக்குடும்பங்களாகவும் தனிக்குடும்பங்களாகவும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது (Dhuraisamipillai, 2010).

## நவீனக் காலக்கட்டத்தில் குடும்ப உறவுமுறைகள்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலான காலக்கட்டத்தை நவீனக்காலம் என்பர். இந்நவீனக் காலத்தில் தோன்றிய அறிவியல் தொழிற்நுட்பங்களின் வளர்ச்சியும் இயந்திரங்களின் பெருக்கமும் குடும்ப உறவுகளுக்கிடையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அலைபேசி, முகநூல், புலனம், திரைப்படங்கள் முதலிய சமூக ஊடகங்கள் குடும்ப உறவுகளிலிருந்து தனிமனிதர்களாகப் பிரித்துள்ளன. அதேவேளையில், தனிமனிதர்களுக்கிடையிலான தொடர்பையும் உலகளாவியதாக மாற்றியுள்ளன. இத்தகைய "நவீன குடும்பம் (Modern Family) மேன்மேலும் தனிமனிதச் சார்புடையதாகி வந்துள்ளது. குழந்தைகளின் படிப்பு, நோயுற்ற போது உதவி, துணிகளைத் துவைத்தலும், சீர்ப்படுத்தலும், உடனடித் தேவைக்கான பொருள்களை உற்பத்திச் செய்தலும் பதப்படுத்தலும் போன்று, ஒரு காலத்தில் குடும்பத்தில் செய்யப்பட்டு வந்த வேலைகள் ஆகியவை, சிறப்பான முகமைகளால் எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டன. கணவன் அலுவலுக்கெனத் தன் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டியிருக்கிறது. பெண்களும் இதைத் தொடர்கிறார்கள். செயற்கைக் காரணமாக, குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மணமுறிவும் உடைந்த குடும்பங்களும் பெருகிவிட்டன." கூட்டுக் குடும்ப உறவுகள் சிதைந்து தனிக்குடும்பத்தில் கணவன், மனைவி, மகன் அல்லது மகள் ஆகியோரிடையே தனிமனித சுயநலப்பண்புகளைக் காணமுடிகின்றது (Gisbert, Poornachandran, 2013). "குடும்பத்தில் பெற்றோர்களிடையே காணப்படும் வேறுபாடுகள், குழந்தைகளின் மனங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தோன்றும் கருத்து வேறுபாடு திருமணமுறிவு வரை செல்கிறது. இந்நிலைகளைப் பார்க்கும் பெண்களும் குழந்தைகளும் வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பற்றநிலை இருப்பதாகவே எண்ணுகின்றார்கள்." இவ்வாறு தனிமனிதர்களின் மனநிலை சார்ந்த உளவியல் போக்கும் தனிக்குடும்ப உறவுகளின் சிதைவிற்குக் காரணமாகின்றது (Baskaran, 1994).

## பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகள்

தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, பெரியப்பா, சித்தப்பா போன்ற உறவுமுறைகளுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து மனிதன் நவீன வாழ்க்கை

முறையைப் பின்பற்றி வாழக் கற்றுக்கொள்கின்றான். இதுவரை குடும்ப உறவுகளுக்கிடையில் பின்பற்றப்பட்டு வந்த ஒழுக்கப் பண்புகளிலிருந்து விலகி வாழ முற்படுகின்றான். குடும்பத்தில் தனிமனிதக் கடைமைகளை நிறைவேற்றுவதில் ஒருவகை நிர்ப்பந்தம் வன்முறையும் நிகழ்த்தப்படுவதாக எண்ணுகின்றான். குடும்பம் தனிமனிதன் மீது சுமத்தியுள்ள கடமைகளுக்குச் செவிசாய்க்காதவனாகவும் மரபு மீறுபவனாகவும் வாழ்கின்றான். குடும்பத்தில் கணவன், மனைவி, மகன் அல்லது மகள் அவரவர் விருப்பம் போல் வாழவும் உரிமையுண்டு என்ற தனிமனிதச் சிந்தனைகளின் தோற்றமே பின் நவீனச் சூழலிலான குடும்ப உறவுகளாக வரையறுத்துக் கொள்ளலாம். குடும்ப உறவுகளிலிருந்து விலகிய ஒருவன் பின் நவீனச் சூழலுக்கு எவ்வாறு நகர்ந்துள்ளான் என்பதை, "பற்றிக் கொள்ள எதுவுமற்ற ஒரு வகையான கையறுநிலையில், பின் நவீனத்துவ மனிதன் வாழ்கின்றான்." என்று அ.மார்க்ஸ் குறிப்பிடுகின்றார் (Marks, 2010). பின் நவீனத்துவ சிந்தனையாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் ரொலாண்பார்த் (Roland Barthes), இவர் குடும்பம் ஓர் அதிகார அமைப்பாக செயல்படுகின்ற நிறுவனம் என்கின்றார், "ஒரு முக்கோணத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உச்சியில் இருப்பது அதிகாரம், பள்ளி, மருத்துவமனை, கோவில், குடும்பம், காவல், கட்சி அமைப்பு என்று எல்லா நிறுவனங்களின் தலைமை என்பது உச்சி" என்று தோத்தாத்ரி அடிக்கோடிட்டுக் காட்டுகின்றார் (Thothari, 2015). குடும்ப உறவுகளில் காணப்படுகின்ற "அதிகார உணர்வு என்பது, மனித இயல்பிலேயே உள்ளது. அதிகாரம் என்பதைச் சுரண்டலமைப்பிலிருந்து வருவிக்காமல் சுயாதீனமாக அமைப்பாக அணுக வேண்டும். குடும்ப உறவுகள் அனைத்திலுமே அதிகாரம் செயல்படுவதாக ஃபூக்கோ (Micheal Foucault) சொல்கின்றார்." என்று ந.முத்துமோகன் சுட்டிக்காட்டுகின்றார் (Muthumohan, 2015). இதனடிப்படையில் பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகளின் நிலைமையைப் பின்வருமாறு காணலாம்.

## பின் நவீனத்துவ உறவுகள்

பின் நவீனத்துவமானது ஒழுக்கம் x ஒழுக்கமின்மை, நன்மை x தீமை, நட்பு x பகை, அன்பு x வெறுப்பு முதலிய இரட்டை எதிர்நிலைப் பண்புகளை கவனத்திற்கு உட்படுத்துகிறது. அப்பண்புகளில் இடதுபுறம் உள்ளவை சிறப்புக்குரியவை என்றும் வலதுபுறம் உள்ளவை புறக்கணிக்கப்பட்டவை என்றும் பின் நவீனத்துவம் வகைப்படுத்துகிறது. வலதுபுறமுள்ள புறக்கணிக்கப்பட்டவையின் மீது கவனம் செலுத்த வேண்டுமென பின் நவீனத்துவம் வலியுறுத்துகிறது. இதனைக் குடும்ப உறவுகளில் புறக்கணிக்கப்பட்டு வந்த உறவுடன் பொருத்திக் காணலாம். குடும்பத்தில் பெண் என்பவள் தாய், மகள், பேத்தி, மருமகள், மாமியார் முதலிய உறவுமுறைகளில் அடையாளம் காணப்படுகின்றாள். குறிப்பாக, தாய் எனப்படுபவள் குடும்பத்தின் ஏனைய பிற உறவுகளை இணைக்கின்றவராகவும் குடும்ப நலனுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றவராகவும் இருக்கின்றார். குடும்பத்தின் சுமைகளை ஆலமரத்தின் விழுதுகளைப் போலத் தனக்குத்தானே கைமாற்றிக் கொள்பவராகவும் வாழ்கின்றார். குடும்பத்தில் ஏற்படுகின்ற அவமானங்களைத் தனக்கானதாக ஏற்றுக் கொண்டு தீர்வு காண விழைகின்றார். இவ்வாறு குடும்ப உறவுகளில் தாய் புனிதமான நிலைக்கு உயர்த்தப்படுகின்றாள். இந்நிலையில் கு.சின்னசாமியின் 'விற்றுப்பெற்ற அவமானங்கள்' என்ற கவிதை,

"சாபம் நீங்கியவளின் துயரத்தில்

வடிந்து போகலாம்

வரத்தின் மகிழ்ச்சி

விற்றுப்பெற்ற அவமானங்கள்

அழகுபடுத்துகின்றன

ஆன்மாவின் முகத்தைக்

கல்லறைக்கு வெளியே

கதறும் நாடகத்தை

அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றன

பின் நவீனத்துவ உறவுகள்

புதைக்கப்பட்ட உடலில் இருந்து

எழும்புகின்றன

ஆயிரம் ஆயிரம் நடுகற்கள்

அவர்களுக்காய்"

குடும்பத்தில் தாயின் உழைப்பு, கணவன், மகன், மகள், பேத்தி, பேரன், மாமனார், மாமியார், மருமகள் போன்ற உறவுகளால் சுரண்டப்படுகின்றது. அவளுக்குக் கிடைத்திருக்கும் இந்த வாழ்க்கை சாபமானதாக இருக்கிறது. அவள் வேண்டுதலில் பெற்ற மகிழ்ச்சி நிலையற்றதாகத் துன்பத்திற்கே இட்டுச்செல்கிறது. குடும்பத்திற்காக தன்சுயமரியாதையை உயர்வாகக் கருதாது உழைத்தவரைக் குடும்பத்தின் உறவுகள் ஒரு நாளும் அழகுபடுத்திப் பார்ப்பதில்லை. அவள் இறந்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டப் பின்னர், கல்வெட்டுக்கள் வைத்து வெள்ளை அடிப்பது, பூ, மாலைகளால் அலங்கரிப்பது, மெழுகுவர்த்தி ஏற்றுவது, சாம்பிராணி புகை போடுவது போன்ற செயல்பாடுகள் தனிமனிதர்களின் சுயநலப்பண்பையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நடந்து கொள்வதையும் எடுத்துக்காட்டுகின்றது (Cinnaswamy, 2012). இந்த நிலைமை இன்று பெரும்பாலான குடும்ப உறவுகளிலும் காணப்படுகின்றன. இத்தகைய போலியான உள்ளன்பு கொண்டவர்களே பின் நவீனத்துவ உறவுகள் என்பதைக் கவிஞரின் வழிநின்று அறியமுடிகிறது.

## குடும்ப உறவுகளில் ஒத்த மனநிலையின்மை

குடும்ப உறவுகளில் காணப்பட்ட தனிமனித ஒழுக்கம், சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், மூத்தோர் அறிவுரையைப் பின்பற்றுதல் போன்ற பண்புகள் இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. குடும்ப உறவுகளின் அடித்தளமாக இருந்த ஒத்தக் கருத்தியல் இன்று சிதைந்துள்ளது. அவரவர் கொண்டக் கருத்துக்களை நிறுவ முயலுகின்றனர். இது அடிப்படையில் குடும்ப உறவுகளின் மாண்பைக் குலைப்பதாகவும் தனிமனித சுயநலப் போக்காகவும் பார்க்க வேண்டியுள்ளது. அந்தவகையில் ஒரு தந்தை தனது குழந்தைக்குப் பெயர் வைக்க விரும்புகின்றான். குடும்பத்தில் உள்ளவர்களிடமும் ஒரு வார்த்தைக் கேட்டுவிடலாம் இல்லையென்றால் அவர்களுக்கும் வருத்தம் வந்துவிடும் என்று நல்லெண்ணத்துடன் கேட்கின்றான். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர் மனவெளிப்பாடாகப் பெயர்களைத் தெரிவிக்கின்றனர். இதனை,

"தமிழ்ப் பெயராக இருக்க

வேண்டும் நல்லாசிரியர் மாமனாருக்கு

புராணப் பாத்திரப் பெயரில்

தீராக்காதல் மாமியாருக்கு

கூப்பிட நவீனம் கேட்டாள்

மரபுவழி மனைவி

தாய் பெயரொலியில் கொஞ்சம்

கொண்ட பெயர் வைத்தழைக்க

அதீத இரட்டைப்பாசம் அப்பாவுக்கு

சாமி பெயரில் பயபக்தி

ஈர்ப்பு அம்மாவுக்கு

பின்னால் கிண்டல் பண்ணாதபடி

எச்சரித்தாள் தங்கை”

என்பது, மாமனார் தமிழ்ப்பற்றாளர், மாமியார் புராணத்தில் ஈடுபாடுள்ளவர், மனைவிக்கு நவீனத்துவம், தந்தைக்கு அவரது தாயின் மீது பாசம், தாய் இறைப்பற்றாளர், தங்கை எதிர்காலத்தில் யாரும் கேலி செய்யாதிருக்க எச்சரித்தல் ஆகியன கூட்டுக்குடும்ப உறவுகளில் ஒத்தக்கருத்துக்களுக்கு இடமில்லை என்பதைத் தெளிவுப்படுத்துகின்றது (Ravichanthiran, 2018). மேலும், தனிமனிதன் சார்ந்த கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. குழந்தையின் தந்தைக்கு நெருக்கடிகள் தரப்படுகின்றன. இத்தகையப் போக்குகள் பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகளுக்கிடையில் நிர்ப்பந்தங்களும் குழப்பங்களும் காணப்படுவதை அறியமுடிகின்றது.

## மாமியார் - மருமகள் உறவும் அதிகார ஒழுங்கவிழ்ப்பும்

பொதுவாக, குடும்ப உறவுகளில் காணப்படுகின்ற “எல்லாவிதமான ஒழுங்கும் (order) வேறு ஏதொன்றையோ மறைப்பதற்கான முகமூடிதான்”என்று பின் நவீனத்துவ சிந்தனையாளர் லியோதார்த்தின் (Jean - Francois Liyotard) கருத்தை அ.மார்க்ஸ் வழிமொழிகின்றார் (Marks, 2010). இன்று பெரும்பாலானக் குடும்பங்களில் மாமியார் - மருமகள் உறவுமுறை முரண்பாடானதாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக, மாமியார், மருமகள் மீதும் மருமகள் மாமியார் மீதும் குறைகளைச் சுட்டிக்காட்டி அதிகாரம் செலுத்துவதையும் பார்க்க முடிகின்றது. இந்நிலையில் லீனாமணிமேகலையின் கவிதையொன்று பின்வருமாறு அமைகிறது.

“எனக்கொரு குட்டைப் பாவடை வேண்டும்

அந்தப் பாவாடையில்

உன் அன்னை விரும்பக் கூடிய மருமகள் அல்ல நான்

எனப் பொறித்திருக்க வேண்டும்”

என்பது, மாமியார் - மருமகள் இருவருக்குமிடையிலான உட்பூசலில் கணவன் பழியாக்கப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. தாய்க்கு ஆதரவாக மகன் பேசினால் மனைவியின் எதிர்ப்புக்கும் மனைவிக்கு ஆதரவாகப் பேசினால் தாயின் எதிர்ப்புக்கும் ஆளாகின்றான். இவ்வாறு மாமியார் - மருமகள் உட்பூசல்களில் கண்டுகொள்ளாதவர்களாக இன்று பெரும்பாலான ஆண்கள் தப்பித்துக் கொண்டிருப்பதை அறியமுடிகிறது (Leena Manimekalai, 2016). மேலும்,

“இவள் என்னத்தைக்

கொண்டு வந்தாளாம்?

என்கின்ற மாமியாரும்

இந்த வீட்டிலே

என்னதான் இருக்கு?

என்கின்ற மருமகளும்

ஆடு - புலி ஆட்டம்தான்

ஆடிக்கொண்டு இருப்பார்கள்”

என்ற கவிதை வரிகள், மாமியார் - மருமகள் உறவில் நடைபெறும் உட்பூசல்களுக்குத் தீர்வில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன (Uma Kannan, 2018). பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகளுக்கிடையில் ஏற்படுகின்ற உட்பூசல்களுக்குத் தீர்வுகள் எதுவுமின்றி உழன்று கொண்டிருப்பதை அறியமுடிகின்றது.

## தாய் - சேய் உறவு

தாய்க்கும் சேய்க்கும் இடையிலான உறவு தொப்பூள்கொடி உறவாகும். இதனை மாலதி மைத்ரியின் கவிதை பின்வருமாறு விளக்குகின்றது.

"எனக்குப் பிரசவம் பார்க்கும்

செவிலியர்களுக்கு

கலவரப்பட்டுகத்துவதா

பரவசப்பட்டு துள்ளிக் குதிப்பதா எனப்

பிடிபடாத நிலையில்

எனது உடம்பிலிருந்து வெளிவந்து

ரத்தப் பிசுபிசுப்போடு

என்னைத் தலைத்தூக்கிப் பார்க்கிறது.

சொன்னால் நீங்கள் நம்புவீர்களா

எனத் தெரியவில்லை

உண்மையாகவே

ஈரமான சிறகுகளோடு

என்குழந்தை"

என்பது, தாய் பிரசவக்காலங்களில் பல்வகைப் போராட்டங்களை எதிர்கொள்கின்றாள். பிரசவத்திற்குப் பின்னர், தன் குழந்தையைப் பார்க்கும் பொழுது அவள் எதிர்கொண்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கிப் பெருமகிழ்ச்சி அடைகின்றாள் என்பதை எடுத்துக்காட்கின்றது (Malathy Maitri, 2012). மேலும், 'ஈரமான சிறகுகளோடு என்குழந்தை'என்ற வரிகள் தாயானவள் தன் குழந்தை சிறகுகளோடுதான் பிறந்துள்ளது. அது பிற உறவுகளின் உதவியை எதிர்பார்த்திருக்காது. தன் தேவைகளைத் தானே சிறகை விரித்துப் பறந்து சென்று தேடிக்கொள்ளும் என்பதாக வெளிக்கொணருகிறது. இது இன்றைய பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகளில் ஒருவர் மற்றொருவருக்கு உதவியாக இருப்பதில்லை. அவரவர் பணிகளை செய்து கொள்வதற்கே நேரமில்லை என்று வருத்தப்பட்டுக் கொள்கின்றனர். இந்நிலையில் ஒரு தாய் தன் குழந்தையின் எதிர்காலம் குறித்த அச்சமின்மையை அறியமுடிகிறது.

## தாய் - மகன் உறவில் - தாயின் தனிமையும் புலம்பலும்

தாய்க்கும் மகனுக்கும் இடையிலான உறவில் தாயின் எதிர்காலமாக மகன் பார்க்கப்படுகின்றான். குழந்தைப் பருவத்தில் அவனது செயல்கள் ஒவ்வொன்றையும் ரசிக்கின்றாள். வீடு முழுவதும் விளையாட்டுப் பொருட்களைக் கலைத்துப் போடுதல், அடுக்கி வைத்தல், பிடித்த உணவுகளைச் சமைத்து ஊட்டிவிடுதல், பிடித்த உடைகளை அணிவித்து மகிழ்தல் என்பதாகத் தாயின் உலகமாகவே பார்க்கப்படுகின்றான். இவ்வாறு தாய்க்கும் மகனுக்குமிடையிலான உறவு மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் காணமுடிகின்றது. இதனை உமா மகேஸ்வரியின் கவிதையொன்று,

"மகனில்லாத வீட்டில்

அசையாத எல்லாமும்

அடைகின்றன சிலைத்தன்மையை

ஆணைகளற்ற அடுப்பில்

சமைத்த ருசியுறாத உணவுகள்

அவன் கை துடைக்காத

அலங்காரத் திரைகள்

தரையலமாரிகளில்

உறங்கும் கிரிக்கெட் மட்டைகள்

அவன் குரலொலிக்காத சுவர்கள்

தனிமையின் சூழலில்

தடுமாறும் தினங்களை

'வாட்ஸ்அப்'பால்

வழி நடத்துகின்றான்

பெரிய இவன் போல"

என்பது, மகனைப் பிரிந்து தனித்து வாழ்கின்ற தாயின் புலம்பலைப் பதிவு செய்கிறது (Uma Maheswari, 2014). அவன் பயன்படுத்திய பொருட்கள் அசையாத சிற்பங்களாகிக் கிடக்கின்றன. அவனது கட்டளைகள் ஏதுமின்றி சமைத்த உணவுகள் சுமையின்றி இருக்கின்றன. அலங்காரத் திரைகளில் அவன் அவ்வப்போது கைகளைத் துடைப்பான் அதுவும் பயன்பாடற்றுக் கிடக்கின்றது. அவன் பயன்படுத்தாத கிரிக்கெட் மட்டைகள், அவன் குரலை எதிரொலிக்காதச் சுவர்கள் என்பதாகத் தாய் மகனைக் குறித்து வருந்துகின்றாள். 'வாட்ஸ்அப்'பால் வழி நடத்துகின்றான் பெரிய இவன் போல' என்ற வரிகள், புலனச் செயலி தாய்க்கும் மகனுக்கும் இடையிலான உறவின் தொடர்பைச் சாத்தியப் படுத்தியிருக்கின்றது. தாய் மகனிடமோ அல்லது மகன் தாயிடமோ எப்பொழுது வேண்டுமானலும் நேரலையில் சந்தித்து நலம் பரிமாறிக் கொள்ளலாம் என்ற அலட்சியத்திற்கு வழிவகுத்துள்ளது. இது இன்றைய பின் நவீனச் சூழலில் தாய், தனது மகனையோ அல்லது மகளையோ வளர்த்து படிக்க, வைத்து வெளிநாடுகளில் குடியமர்த்தி விட்டுத் தனிமையில் புலம்பிக் கொண்டிருப்பதை காட்டுகின்றது. இவ்வாறு குடும்ப உறவுகளில் தனிமனித சுயநலப் பண்புகளே மிகுந்துள்ளதை அறியமுடிகிறது.

## தந்தையின் செயல்பாடும் குழந்தையின் எதிர்வினையும்

இன்றைக்கு பெரும்பாலான குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் பொருளீட்டுவதையே முதன்மை நோக்கமாகக் கருதுகின்றனர். குழந்தையை முகவரிடம் ஒப்படைத்து விட்டுப் பணிக்குச் செல்கின்றனர். இந்நிலையில் தாய், தந்தை உறவுகளின் அரவணைப்பு குழந்தைக்குக் கிடைக்கப் பெறுவதில்லை. குழந்தைக்கும் பிற உறவுகளின் தொடர்புகள் எதுவுமின்றியே வளர்ந்து வருகின்றது. ஞாயிறு, பண்டிகைகள், அரசு விடுமுறைகள் போன்ற நாட்களில் மட்டுமே பெற்றோர், குழந்தையுடன் சேர்ந்திருப்பதையும் காணமுடிகின்றது. இதன் பின்னணியிலிருந்து குழந்தையின் மனநிலையையும் வாரத்தில் ஒருநாள் மட்டுமே தன்னோடு விளையாடும் தாயையோ அல்லது தந்தையையோ அது எவ்வாறு எதிர்கொள்ளும் என்பதை,

"அழும் குழந்தைக்கு

துப்பாக்கி ஒன்றை பரிசளித்து

முத்தம் கேட்டேன்

என் நெஞ்சை குறிவைத்துச் சுடுகிறது

துடி துடித்துச் செத்த என் நடிப்பை

பரிசோதனை செய்து முடிக்கிறது

எழுந்து சிரிக்கத் தொடங்கினேன்

புன்னகை முகத்துடன் மீண்டும்

சுடத் தொடங்கியது

அகமகிழ ஒவ்வொரு முறையும்

செத்துப் போகிறேன்"

குழந்தை பசி, தாகம், தூக்கம், இயற்கை உபாதைகள் போன்ற என்ன காரணங்களுக்காக அழுகின்றது என்று சிந்திப்பதற்குத் தந்தைக்கு நேரமில்லை. அந்தசமயத்தில் குழந்தையின் அழுகையை நிறுத்தவதற்குப் போலித்துப் பாக்கியைப் பரிசளித்து முத்தமொன்றைக் கேட்பது தந்தையின் சுயநலத்தைக் காட்டுகிறது. குழந்தையும் தந்தையைச் சுட்டவுடன் இறந்து விடுவார் என்பதை அறிந்திருப்பதில்லை. குழந்தையின் மனம் தர்க்க, அதர்க்கச் சிந்தனைகளுக்கு உட்பட்டவையல்ல. நன்மை x தீமைகளைப் பகுத்தறிகின்ற பக்குவமற்றது குழந்தை. எனினும் அக்குழந்தை தனது தந்தை போலியாக நடிப்பதை அறிந்து கொள்கின்றது. தந்தையைப் போலவே போலியான மகிழ்ச்சியுடன் ஒவ்வொரு முறையும் சுடுகின்றது. தந்தையும் உயிர்பெற்று இறந்தவனாக நடித்துக் கொண்டிருக்கின்றான் (Kaviri Naadan, 2016). இவ்வாறு பின் நவீனச் சூழலில் தந்தைக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவின் மகிழ்ச்சி என்பது போலிமைகளாலும் ஏமாற்றங்களுக்கிடையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. குழந்தை அழுகையிலிருந்து விடுபடவும் மகிழ்விக்கவும் துப்பாக்கியைக் கையில் கொடுப்பது எதிர்மறைப் பண்புகளுக்கு இட்டுச் செல்லக்கூடியதாகும். பிற்காலங்களில் அக்குழந்தை தனது ஆசைகள், விருப்பங்கள் போன்றவற்றிற்காக எதிரிலுள்ளவர்களைப் பழிவாங்குகின்ற மனநிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

இன்றைய பின் நவீனச் சூழலில் குடும்ப உறவுகளின் நிலைமையைக் கவனத்திற்கொள்ள வேண்டும். குடும்ப உறவுகளில் தொலைக்கப்பட்ட ஒழுக்கம், அன்பு, இரக்கம், கருணை, பரிவு, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை போன்ற மாண்புகள் மீட்டுக் கொணரப்பட வேண்டும். குடும்ப உறவுமுறைகளில் காணப்படுகின்ற சுயநலப்பண்புகள் கைவிடப்பட வேண்டும். குடும்பத்தின் நலனுக்காக உழைத்தவரைக் கண்டுகொள்ளாது இறந்த பின்னர், அனைவரும் இரங்கல் தெரிப்பது, சடங்குகள் செய்வது, புகழ் பாடுவது போன்ற செயல்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். அவரவர் கொண்ட கருத்துக்களில் நிற்காமல், குடும்பத்தின் நலனுக்காகக் கருத்தொன்றுபடுதல் வேண்டும். மாமியார் - மருமகள் உறவிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் களைந்து ஒன்றுபட வேண்டும். மகன் பணி, திருமணம் போன்ற காரணங்களால் பெற்றத்தாயைத் தனிமையில் விடுகின்ற போக்குகள் கைவிடப்பட வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளிடம் எதை இன்று விதைக்கின்றோமோ அதையே பிற்காலங்களில் அறுவடை செய்கின்றோம் என்பதை உணர்ந்து குழந்தைகளிடம் நற்பண்புகளை வளர்க்க வேண்டும். நிறைவாக, பன்னாட்டுக் கலாச்சாரங்கள், நுகர்வுசந்தைப் பொருட்குவியல்கள், மேலை நாட்டு வாழ்க்கைமுறைகள், புதிய சிந்தனைகள் முதலியவற்றால் பிணைக்கப்பட்டாலும் குடும்ப உறவுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிவுமாகும்.

## References

Baskaran, K. (1994) Samuthaya Thathuvangal, Tamil University Veliyeedu, Tanjore, Tamil Nadu, India.

Cinnaswamy, Era. (2012) Eezilaik Kizankin Maamcam, Kalachuvadu Publications, Nagarcoil, Tamil Nadu, India.

Dhuraisamypillai, Avvai, S. (2010) Purananoor Moolamum Uraiym, Poombukar Veliyeedu, Chennai, Tamilnadu, India.

Gisbert, S.J. Poornachandran, G. (2013) Samuuhaviyalin Adippadaihal, Tamil Translation of Fundamentals of Sociologhy, National Translation Mission, Central Institute of Indian Languages, Mysore, Karnataka, India.

Kaviri Naadan, T. (2016) Kazhuthil Maatikonda Mutham, Pavaai Publications, Chennai, Tamil Nadu, India.

Leena Manimekalai, (2016) Chichili, Natrinai Pathipagam, Chennai. Tamil Nadu, India.

Malathy Maitri, (2012) Neerintri Amaiyathu Ulagu, Kalachuvadu Publications, Chennai, Tamil Nadu, India.

Marks, A. (2010) Pin Naveena Nilai Ilakkiyam, Arasiyal, Thesiyam, PulamVeliyeedu, Chennai, Tamil Nadu, India.

Muthumohan, N. (2015) Airoppiya Thathuvangal, New Century Book house, Chennai, Tamilnadu, India.

Uma Kannan, (2018) Mozhi Marantha Mavunangal, Therkku Pathippagam, Nagarcoil, Tamil Nadu, India.

Uma Maheswari, (2010) Mittai Kadikaram, Natrinai Pathippagam, Chennai, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License